# பத்திரிக்கைச் செய்தி

## வீட்டு மனை பிரிவுக்கு ஒப்புதல் வழங்க ரூ.50,00,000/- லஞ்சம் கேட்டு முன்பணமாக ரூ.5,00,000/- பெற்ற பஞ்சாயத்து தலைவரின் கணவர் கைது

புகார்தாரர் திரு.கார்த்திகேயன், தலைமை நில கொள்முதலாளர், ப்ரைம் சிட்டி வென்ட்சர் ப்ரைவேட் லிமிடட், சென்னை என்பவர் சேலம் மாவட்டம், எர்னாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள 5.6 ஏக்கரில் உள்ள சர்வே எண்கள் 246/2அ மற்றும் 246/ஆ2 உள்ள நிலத்தில் 120 வீட்டுமனை பிரிவுகளை அமைக்க ஒப்புதல் வழங்குவதற்காக விண்ணப்பித்திருந்தார். திரு.மணிகண்டன் (திருமதி.மேகலா, பஞ்சாயத்து தலைவரின் கணவர்) தன்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி தனது மனைவியிடம் ஒப்புதல் வாங்கி தருவதாக கூறி தனக்கு லஞ்சமாக ரூ.50,00,000/- கொடுக்க வேண்டும் என்றும், முன்பணமாக ரூ.5,00,000/- கொடுக்க வேண்டுமென புகார்தாரரை வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சேலம் பிரிவில் புகார் மனு கொடுத்துள்ளார். இப்புகார் சம்பந்தமாக நேற்று (04.09.2023) வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 05.09.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.மணிகண்டன் என்பவரின் உத்தரவின் பேரில் திரு.ஆனந்தன், பட்டம்பட்டி, புதூர் கிராமம், சேலம் மாவட்டம் என்பவர் புகார்தாரரிடமிருந்து லஞ்ச முன் பணமான ரூ.5,00,000/-யை கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் இருவரும் கைது செய்யப்பட்டார்.

**PRESS NOTE**

**PANCHAYAT PRESIDENT HUSBAND ARRESTED FOR DEMAND OF Rs.50,00,000/- AND OBTAINMENT OF ADVANCE BRIBE OF RS.5,00,000/- FOR HOUSE PLOT LAYOUT APPROVAL**

The Complainant Tr.Karthikeyan, working as Land Procurement Head in M/s Prime City Ventures Pvt. Ltd, Chennai and the company has developed 120 numbers of House Plots on a land located in S.No.246/2A and 246/2B1 to an extent of 5.6 acres of Eranpuram Village of Salem District. Tr.Manikandan, (H/o Tmt.Megala, President of Ernapuram Panchayat) demanded a total sum of 50 Lakhs as bribe and Rs.5 Lakhs bribe in advance from the complainant for arranging to give approval for the plots by exercising his personal influence with his wife Tmt Megala. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Salem detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 05.09.2023 on the instructions of Tr.Manikandan, Private individual Tr.Anandan, Pattampatti, Pudur village, Salem District received the advance bribe amount of Rs.5,00,000/- from the complainant. Both the accused were arrested.